**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.10.2013**

## நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகளை வாங்கிப் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு

நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகளை மானிய விலையில் வாங்கிப் பயன்பெறுமாறு திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண் பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் மானிய விலையில் நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 2013-2014-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் வழங்க ரூ.134.65 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.30.40 லட்சமும், இதரத் தொகை மற்ற பிரிவினருக்கும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இயந்திர களை எடுப்பான், இயந்திரத் தெளிப்பான், நெல் நாற்று நடவுக் கருவி, விசை உழுவை (பவர் டில்லர்), சுழல் கலப்பை, நெல் அறுவடை இயந்திரம், டிராக்டருடன் இணைத்துப் பயன்படுத்தப்படும் கருவிகள், மனித சக்தியால் இயக்கப்படும் கருவிகள் போன்றவை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும்.

இத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம், செங்கம், தண்டராம்பட்டு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, நெ.413, பசுவண்ணன்

நகர், குறிஞ்சி நகர், வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ஆரணி, செய்யாறு, வந்தவாசி வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, நெ.67, கார்த்திகேயன் சாலை, சைதாப்பேட்டை, ஆரணி என்ற முகவரியிலும் நேரில் அணுகி விவரங்களைத் தெரிந்து விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**கர்நாடகத்துக்கு ரூ. 5,800 கோடி மானியம்**

உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தினால், கர்நாடகத்தின் உணவு தானியங்களுக்கான மானியம் ரூ. 4,300 கோடியில் இருந்து ரூ. 5,800 கோடியாக உயரும் என்று, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூருவில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கடந்த 2004-இல் மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தகவலறியும் உரிமைச் சட்டம், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதிச் சட்டம், வன உரிமைச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், நிலம் கையகப்படுத்தல் சட்டம், மனிதக் கழிவை மனிதனே அள்ளும் முறையை ஒழிக்கும் சட்டம் போன்ற 7 புரட்சிகரமான சட்டங்களை அறிமுகம் செய்துள்ளோம்.

இந்தச் சட்டங்கள் மூலம், பொதுமக்களுக்கு சட்ட ரீதியான உரிமைகளை அளித்திருக்கிறோம். இந்தச் சட்டங்களால் அரசு நிர்வாகம் ஒளிவுமறைவற்றதாக மாறியிருக்கிறது.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, ஒரு நபருக்கு 5 கிலோ உணவு தானியம் அளிக்கப்படும். அடுத்த 3 ஆண்டுகளுக்கு, நியாய விலை அங்காடிகளில் ஒரு கிலோ அரிசி 3 ரூபாய்க்கும், ஒரு கிலோ கோதுமை 2 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும்.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமலாக்கப்பட்டால், கர்நாடகத்திற்கு மத்திய அரசின் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் உணவு தானியம் ஆண்டுக்கு 22 லட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து 25 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், உணவு தானிய மானியம் ரூ. 4,300 கோடியில் இருந்து ரூ. 5,800 கோடியாகவும் உயரும்.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தினால், கர்நாடகத்தின் 79 சத ஊரகப் பகுதிகள், 49 சத நகரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் நேரடியாகப் பயனடைவர். தென் மாநிலங்களைக் காட்டிலும், உத்தர பிரதேசம், பிகார், ஜார்கண்ட், ஒடிசா, குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இந்தத் திட்டத்தால் அதிக பலனடையும். பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடில்லா நாட்டை உருவாக்குவதற்கே உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது.

மத்திய, மாநில அரசுகள் நில கையகப்படுத்தும் போது, பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு சரியான இழப்பீடு வழங்குவதே இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டால், கிராமப்புறங்களில் நிலத்தின் சந்தை விலையில் இருந்து 4 மடங்கும், நகரப்புறங்களில் 2 மடங்கும் இழப்பீடு அளிக்கப்படும். இதேபோல விவசாயிகள், பழங்குடியினரைக் கட்டாயப்படுத்தி நிலம் கையகப்படுத்த இயலாது என்றார் ஜெய்ராம் ரமேஷ்.

**கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி**

பரமத்தி வேலூரில் கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், தென்னை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏராளமாக தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள தென்னை மரங்களை மொத்த வியாபாரிகள் ஒரு வருடம் முதல் மூன்று வருட ஒப்பந்த முறையில் மரத்திற்கு வருடம் ஒன்றிற்கு ரூ.500 முதல் ரூ.700 வரையில் ஒப்பந்தம் செய்து, அதில் வரும் தேங்காய்களை பறித்து வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

சிறு விவசாயிகள் தங்களது தேட்டங்களில் ஓரப்பகுதி மற்றும் வீடுகளின் ஓரப்ப குதிகளில் விளையும் தேங்காய்களை பறித்து, காய வைத்து கொப்பரைத்

தேங்காய்களாக விற்பனை செய்து வருகின்றனர். இந்தக் கொப்பரைத் தேங்காய்களை பரமத்தி வேலூரில் வியாழன் தோறும் நடைபெறும் ஏலச் சந்தைக்கும், வெள்ளகோவில், காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கொப்பரைத் தேங்காய் ஏல விற்பனை மையங்களுக்கும் அனுப்பி வருகின்றனர்.

இதில், கடந்த வாரம் கொப்பரைத் தேங்காய் கிலோ ஒன்று ரூ.67 வரை விற்பனையானது. தற்போது கொப்பரைத் தேங்காய் விலை சரிவடைந்து கிலோ ரூ.60-க்கு விற்பனையாகிறது. இதனால் குறு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு அக். 28-ல் தீவன மேலாண்மைப் இலவசப் பயிற்சி

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், அக். 28-ம் தேதி அசோலா உற்பத்தி மற்றும் தீவன மேலாண்மை பயிற்சி நடைபெற உள்ளது. இதுகுறித்து, மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், அசோலா உற்பத்தி மற்றும் தீவன மேலாண்மை குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் அக். 28-ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சியில், அசோலாவை உற்பத்தி செய்யும் முறை, தீவன பயன்பாடு, விஞ்ஞான முறையில் சமச்சீர் தீவனம் தயாரிக்கும் முறை உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில், பங்கேற்க விரும்பும் விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293251, 293592, 292365 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

## 2,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

திருவாரூர் அருகே நன்னிலத்தில் சுமார் 2,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மேடான வயல்களில் பயிருக்கு பயனுள்ளதாகவும், சற்று தாழ்வான பகுதி வயல்களில் நீர்த்தேங்கி சம்பா நெற்பயிர்கள் மூழ்கிய நிலையில் உள்ளன.

திருவாரூர் அருகே நன்னிலத்தை அடுத்த அதம்பார், நிம்மேலி, ஜெகநாதபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 5,000 ஏக்கரில் சம்பா நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த சாகுபடி நிலங்களுக்கு வெட்டாற்றிலிருந்து பிரியும் முடிகொண்டான் ஆற்றின் வழியாக பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இக்கிராமங்களின் சாகுபடிக்கு போக மீதம் தண்ணீர் திருமலைராஜன் ஆற்றில் வடியவைக்கப்படுகிறது.

இந்நிலையில், கடந்த இரு நாள்களாக இப்பகுதியில் பெய்து வரும் மழையின் காரணமாக முடிகொண்டான் ஆற்றில் கொள்ளளவுக்கு அதிகமாக தண்ணீர் வரத்து இருந்ததால் மேற்கூறிய கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியே உள்ளன.

மேலும், கிராமங்களில் உள்ள சில வாய்க்கால்களில் உடைப்பு ஏற்பட்டு, அந்த தண்ணீரும் வயலுக்குள் புகுந்துள்ளன.

இதனால் இப்பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது.

இளம்பயிர்களில் சூழ்ந்துள்ள மழைநீர் இரு நாள்களாக வடியாததால் விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

வயல்களில் தேங்கிய மழைநீர் ஓரிரு நாள்களில் வடியவில்லையெனில் பயிர்கள் அழுகி பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

எனவே, உடைப்பு ஏற்பட்டுள்ள வாய்க்கால்களை அடைத்து தண்ணீரை வடியவைக்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**பட்டு உற்பத்தியில் கிராமப் பெண்களின் பங்களிப்பு அவசியம்**

பட்டு உற்பத்தியில் கிராமப் பெண்களின் பங்களிப்பு அவசியம் என்று, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தினார்.

கர்நாடக மாநில பட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், பட்டு வளர்ச்சித் துறை மற்றும் பன்னாட்டு தற்கால உயிரியலாளர்கள் கூட்டமைப்பு சார்பில், பெங்களூருவில் வியாழக்கிழமை நடைபெற்ற பெண்கள் அதிகாரமயமாக்கல் மற்றும் ஊரக மேம்பாட்டுக்கான உயிரியல், பட்டு வளர்ப்பில் அண்மைக்கால நவீனத்துவம் ஆகியவை தொடர்பான தேசியக் கருத்தரங்கைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது. இந்தியா முதலிடம் பெறுவதற்கு கிராமப் பெண்கள் பட்டு வளர்ப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவது அவசியம்.

பட்டு வளர்ப்பில் ஈடுபடும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி அளித்தால், கிராமப்புறங்களில் பட்டு உற்பத்தி பெருகும். இதன்மூலம், கிராமப் பெண்கள் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைய முடியும்.

வட இந்தியாவை ஒப்பிடுகையில், தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களும் பட்டு உற்பத்தியில் திருப்திகரமான வளர்ச்சியைக் கண்டுள்ளன. நபார்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் பட்டு வளர்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பை பட்டு உற்பத்தியாளர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள், விஞ்ஞானிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தால், பல புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளலாம்.

ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் வாழும் மலைவாழ் மக்களிடையே பட்டு வளர்ப்பு ஊக்கப்படுத்தப்படும். இதன்மூலம், மலைவாழ் மக்களின் பொருளாதாரம் மேம்படும். பொருளாதாரம் மேம்பட்டால், நக்சலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கத்தில் இருந்து அந்தப் பகுதி மக்களை விடுவிக்கலாம் என்றார் அவர்.

கருத்தரங்கில் கர்நாடக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் எச்.கே.பாட்டீல், முன்னாள் மத்திய அமைச்சர் எம்.வி. ராஜசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நியாய விலையில் வெங்காயம் விற்க அனுமதிக்க வேண்டும்**

தில்லியில் வெங்காயம் விலை அதிகரித்துள்ள நிலையில், நியாயவிலைக் கடைகள் அமைத்து வெங்காயம் விற்க அனுமதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தை முதல்வர் ஷீலா தீட்சித் கேட்டுக் கொண்டுள்ளார்.

"தேர்தலையொட்டி, மாதிரி நன்னடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. அதனால், வெங்காய விலையேற்றத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ முடியாமல் உள்ளோம். அவர்களுக்கு உதவ முன்பு போல நியாயவிலைக் கடைகள் அமைக்க விரும்புகிறோம். அதற்குத் தேர்தல் ஆணையம் அனுமதிக்க வேண்டும். மேலும் மத்திய அரசும் இந்த விஷயத்தில் தலையிட்டு உதவ வேண்டும்' என்று முதல்வர் ஷீலா தீட்சித் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

வெங்காய விலை உயர்வு பிரச்னை மிகவும் தீவிரமாக உள்ளது. அதனால் மத்திய அரசு உதவ வேண்டும். இது தொடர்பாக மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் மற்றும் உணவுத் துறை அமைச்சர் கே.வி.தாமஸ் ஆகியோரை சந்தித்துப் பேசியுள்ளேன். தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தின் மூலம் போதுமான வெங்காயத்தை லாப நஷ்டம் நோக்காத விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று சரத் பவாரிடம் கோரிக்கை வைத்துள்ளேன். நிலைமை தீவிரம் அடைந்துள்ளதையும் அவரிடம் தெரிவித்துள்ளேன்.

வெங்காயம் அளித்து வரும் மாநிலங்களில் தொடர்ந்து பெய்த மழை காரணமாகவே வரத்து குறைந்துள்ளது. அதனால், விலை உயர்ந்துள்ளது. வியாபாரிகள் வெங்காயத்தை கள்ளச் சந்தையில் விற்காமலும், பதுக்கிவைக்காமலும் இருக்க வேண்டும்.

தில்லியில் வெங்காயம் விளைச்சல் கிடையாது. விற்பனை மட்டுமே உள்ளது. விளைச்சல் உள்ள மாநிலங்கள்தான் வெங்காயத்தின் விலையைத் தீர்மானிக்கின்றன. அதனால், தில்லி பிரதேசத்தில் உள்ள வேளாண் உற்பத்தி

விற்பனைக் கமிட்டி சட்டத்தை விரைவில் திருத்த உள்ளோம் என்றார் ஷீலா தீட்சித்.

1998-இல் வெங்காய விலை உயர்வு காரணமாக அப்போது ஆட்சியில் இருந்த பாஜக மக்களிடம் அதிருப்தியைப் பெற்றது. அது அப்போது நடைபெற்ற தில்லி தேர்தலில் எதிரொலித்தது. அதனால், பாஜக தோல்வி அடைந்து காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியது. அது முதல் தொடர்ந்து 15 ஆண்டுகளாக ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசுக்கு அதே போன்று இப்போது வெங்காய விலை உயர்வு பிரச்னையாகியுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 71.25 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 71.25 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,427 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை. வாய்க்காலில் 1,900 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 11.48 டி.எம்.சி.

**பல்லடத்தில் உழவர்சந்தை முன் விவசாயிகள் ஆர்பாட்டம்**

பல்லடத்தில் உழவர்சந்தை முன் விவசாயிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தையின் உள்ளே ஆக்ரமிப்புகளை அகற்ற வேண்டும், வெளி வியபாரிகள் சந்தையின் வெளியில் விற்பனை செய்வதை தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த ஆர்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.,

**வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் மழை பெய்யும் என வானிலை அறிவிப்பு**

வங்கக் கடலில் உருவான தீவிர காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கில் நகர்ந்து, சீமாந்திரா அருகில் நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் ஆங்காங்கே,

கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:

ஆந்திரா அருகில், தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி நிலை கொண்டுள்ளதால், ஆந்திராவில் கடும் மழை பொழிவை தந்துள்ளது. அதிகபட்சமாக கலிங்கப்பட்டினத்தில், 32 செ.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம், தோவாலாவில், 13 செ.மீ., மற்றும் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்தில், 4 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது. அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில், கனமழை பெய்யக் கூடும். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் மழை பெய்யும். என்று அவர் கூறினார்.

**மேட்டூர் அணையிலிருந்து மீண்டும் தண்ணீர் திறப்பு**



மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக வியாழக்கிழமை முதல் மீண்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

நிகழாண்டில், கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்ததால், கடந்த 22-ஆம் தேதி பாசனத்திற்கு திறந்துவிடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது.

டெல்டா மாவட்டங்களில் தற்போது மழை குறைந்து வருகிறது. இதையடுத்து, வியாழக்கிழமை காலை முதல் காவிரி டெல்டா பாசனத்திற்காக, மீண்டும் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

தொடக்கத்தில் நொடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டதால், நீர் மின் நிலையங்களில் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியது.

வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 84.41 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 10,356 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 46.49 டி.எம்.சியாக இருந்தது

**சின்ன வெங்காயம் கிலோ ரூ.100 வரத்து குறைந்ததால் கிராக்கி**



வரத்து குறைந்ததால் சென்னை சில்லறை விற்பனைக் கடைகளில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகத்தில் தாராபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் லாரிகள் மூலம் தினமும் விற்பனைக்காக சின்ன வெங்காயம் கொண்டு வரப்படுகிறது.

கடந்த 6 மாதங்களில் அதிகபட்சமாக கடந்த வாரம் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.60 முதல் ரூ.65 வரை விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டில் வியாழக்கிழமை ஒரு கிலோ முதல் தர சின்ன வெங்காயம்(சாம்பார்) கிலோவுக்கு ரூ.10 விலை உயர்ந்து ரூ.75-க்கு விற்பனையானது. 2-ம் தர வெங்காயம் ரூ.55 முதல் ரூ.65 வரை விற்கப்பட்டது.

மொத்த விற்பனையில் சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்ததால் சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகளில் கால் கிலோ சின்ன வெங்காயம் ரூ.25-க்கும், ஒரு கிலோ ரூ.100 வரையிலும் விற்பனையானது.

விலை உயர்வு குறித்து கோயம்பேடு மார்க்கெட் வெங்காய வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது: பல்லடம், ஒட்டன் சத்திரம், தாராபுரம் ஆகிய பகுதிகள் மற்றும் கர்நாடக மாநிலம் கோலார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் லாரி ஒன்றுக்கு 15 டன்கள் வீதம் 8 முதல் 10 லாரிகளில் 90 டன் வரை வெங்காயம் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டது. ஆனால் சின்ன வெங்காயத்தின் சீசன் செப்டம்பர் மாதத்தோடு முடிவடைந்ததால் மேற்கண்ட பகுதிகளில் வெங்காயச் சாகுபடி பரப்பளவு வழக்கத்தை விட குறைந்துவிட்டது.

இதனால் மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் வெங்காயத்தின் வரத்தும் குறைந்து விட்டது. தற்போது 4 அல்லது 5 லாரிகளில் மட்டுமே சின்ன வெங்காயம் கொண்டுவரப்படுகிறது.

விலை அதிகரித்ததால் வழக்கமாக அதிகளவில் வாங்கும் பொதுமக்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் தற்போது குறைந்த அளவிலான வெங்காயத்தையே வாங்கிச்செல்கிறார்கள். தீபாவளி பண்டிகைக்கு ஒரு வாரமே உள்ளதால் சின்ன வெங்காயத்தின் விலை இதே நிலையில் நீடிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

**ஈரோடு மாட்டுச் சந்தை: ஆந்திர வியாபாரிகள் வருகை அதிகரிப்பு**

இரண்டு மாதங்களுக்குப் பின், ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள மாட்டுச் சந்தைக்கு ஆந்திர வியாபாரிகள் வருகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இச் சந்தையில் மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலம், கரூர், திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் வருகின்றனர். இந்தக் கால்நடைகளை வாங்குவதற்காக கர்நாடகம், ஆந்திரம், கேரளம் மற்றும் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்துசெல்கின்றனர்.

இந்த வாரம் சுமார் 400 பசுக்கள், 350 எருமைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. பசு மாடு ரூ.16,000 முதல் ரூ.33,000 வரையிலும், எருமைகள் ரூ.18,000 முதல் ரூ.34,000 வரையும் விற்பனையானது என கால்நடைச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. வழக்கம் போல ஒவ்வொரு வாரமும் ஆந்திராவில் இருந்து

குறைந்தபட்சம் 50 சரக்கு வாகனங்களில் வியாபாரிகள் வருவது வழக்கம். ஆனால், ஆந்திராவில் தெலுங்கானா போராட்டம் வலுவடைந்ததால், கடந்த 2 மாதங்களாக ஆந்திர வியாபாரிகள் வருகை குறைந்து காணப்பட்டது.

2 மாதங்களாக 5 வாகனங்களில் மட்டும்தான் ஆந்திர வியாபாரிகள் வந்தனர். ஆனால், இந்த வாரம் 15 வாகனங்களில் வியாபாரிகள் வந்திருந்தனர். கோவாவில் இருந்து வந்த வியாபாரிகள், சுமார் 100 மாடுகள் வரை வாங்கிச் சென்றனர்.

கேரளாவில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் எருமைகளை அதிக எண்ணிக்கையில் வாங்கினர்.

**இலுப்பூரில் விவசாய தொழிலாளர்கள் உண்ணாவிரதம்**

இலுப்பூரில் கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் வியாழக்கிழமை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இலுப்பூர் அருகே எண்ணை கிராமத்தில் வாழும் ஏழை விவசாய தொழிலாளர்கள் 22 பேருக்கு தலா 1 ஏக்கர் வீதம் தமிழக அரசால் வழங்கப்பட்டு, அனுபவத்தில் உள்ள புன்செய் நிலங்களை அபகரிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். குடிமனை, குடிமனைப் பட்டா, குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்க வேண்டும். இலுப்பூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் சண்முகம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் எம். சங்கர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றியச் செயலர் சுப்பையா, விவசாய தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலர் ரஹ்மத்துல்லா, மாதர் சங்க நிர்வாகி அமுதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேலத்தில் பலத்த மழை**

சேலத்தில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது.

சேலத்தில் காலை முதல் மிதமான வெப்பநிலை நிலவி வந்தது. பிற்பகலில் கருமேகங்கள் சூழ்ந்து சேலம் மாநகரமே இருளில் மூழ்கியது.

இதைத் தொடர்ந்து, மாலையில் சுமார் 2 மணி நேரம் மழை பெய்தது. இதையடுத்து, பழைய பேருந்து நிலையம், ஐந்து சாலை, நான்கு சாலை, அஸ்தம்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் சாலைகளில் மழை நீர் பெருக்கடுத்து ஓடியது. மேலும், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சேலத்தில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழையால், மாநகரைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஏற்காடு மலையில் பெய்துவரும் மழையால் சரபங்கா நதியில் தற்போது தண்ணீர் வரத் தொடங்கியுள்ளது. இதனால், விவசாயம் செழிக்கும் எனவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சேலத்தில் வியாழக்கிழமை பெய்த மழையால் வெப்ப நிலை முற்றிலும் மாறி குளிர்த்த காற்று வீசியது.

எடப்பாடி 5.4 மி.மீ., வாழப்பாடி 0.6 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. மாவட்டத்தில் மொத்தமாக 6 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

ஏற்காடு, ஆத்தூர், கெங்கவல்லி, தம்மம்பட்டி, மேட்டூர், தாரமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலும் வியாழக்கிழமை மழை பெய்தது.

**அரைவைக்கு பதிவு செய்த கரும்பை வேறு பகுதிக்கு கொண்டு சென்றால் நடவடிக்கை**

சர்க்கரை ஆலையில் அரைவைக்கு பதிவு செய்த கரும்பை வேறு இடத்துக்கு கொண்டு சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என பாப்பிரெட்டிப்பட்டி சுப்பிரமணிய சிவா சர்க்கரை ஆலை மேலாண் இயக்குநர் ரத்தினவேலு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரைவைக்காக பதிவு செய்யப்பட்ட கரும்பை, சில இடைத்தரகர்கள் வேறு இடங்களுக்கு விதிகளுக்குப் புறம்பாக எடுத்துச் செல்வது தெரியவந்துள்ளது. இது விதிகளுக்கு புறம்பானதாகும்.

மேலும், இவ்வாறு எடுத்துச் செல்வதால் ஆலைக்கு இழப்பு ஏற்படும்.

எனவே, அரைவைக்கு பதிவு செய்த கரும்பை சர்க்கரை ஆலைக்கு மட்டுமே வழங்க வேண்டும். மீறி வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வோர் மீது கரும்பு கட்டுப்பாட்டுச் சட்டம் 1966 மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955-இன் படி காவல் துறை மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஆலைக்குப் பதிவு செய்யாத கரும்பை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வோர் உரிய கரும்பு கோட்ட அலுவலரிடம் தடையில்லாச் சான்று பெற வேண்டும் என்றார் ரத்தினவேலு.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.10.2013**

## கொப்பரை விலை உயர்வு தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

கீழக்கரை : காப்பரை விலை டன்னுக்கு, 5,000 ரூபாய் அதிகரித்துள்ளதால், ராமநாதபுரம் மாவட்ட தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை, தாமரைக்குளம், பெரியபட்டினம், ரெகுநாதபுரம் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இங்கு பறிக்கப்படும் தேங்காய்களை மதுரையில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு அனுப்பி வந்தனர். அங்கிருந்து காங்கேயம், வெள்ளக்கோயில் போன்ற ஊர்களில் உள்ள எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. தேவை அதிகரித்தும் மழை இல்லாததால், காய்ப்பு இல்லாமல் தேவையான அளவு சப்ளை செய்யமுடியவில்லை.

தென்னை விவசாயி எஸ்.அப்துல் மாலிக், பெரியபட்டினம் கூறியதாவது: ஐந்து ஆண்டுகளாக தேங்காய்க்கு விலை கிடைக்காமல் ஏராளமான விவசாயிகள் நஷ்டமடைந்து தென்னந் தோப்புகளை பிளாட் போட்டு விற்பனை செய்து விட்டு மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். பல்வேறு சுமைகளை தாங்கி தென்னை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து விவசாயம் செய்து வருகிறோம். தற்போது, கொப்பரை, டன்னுக்கு 5,000 முதல் 8000 ரூபாயும், தேங்காய் டன்னுக்கு 2000 ரூபாய் விலை அதிகரித்துள்ளது. இது விவசாயிகளுக்கு சற்று ஆறுதலை அளித்துள்ளது. தீபாவளியை முன்னிட்டு சில்லறை கடைகளில் விற்பனை செய்யப்படும் தேங்காய் விலை அதிகரிக்கும், என்றார்.

## சோலவ காற்றால் பச்சை இறால் பாடு அமோகம் கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சி

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளம் பகுதியில் சில நாட்களாக சோலவ காற்று அதிகம் வீசுவதால், பச்சை நிற இறால் பாடு அதிகம் கிடைத்து

வருகிறது. இதனால், கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பனைக்குளம், அழகன்குளம், கிருஷ்ணாபுரம், புதுவலசை, சோலையன்தோப்பு, சத்திரம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில், அதிகம் பேர் கரைவலை மூலமாகவும் மீன்பிடி தொழில் செய்கின்றனர். மீன்பாடு அதிகமுள்ள இடங்களில் 3 கி.மீ., தூரம் கரை வலை விரித்து, மறுநாள் அதிகாலையில் கரைக்கு வலை இழுப்பது வழக்கம். இவ்வலையை குறைந்தது 20 பேர் இழுப்பர். மீன்பாடு அதிகமுள்ள நேரத்தில் மீனவ கூலி தொழிலாளிகளுக்கு, தலா 200 ரூபாய் வீதம் சம்பளம் வழங்கப்படும். வியாபாரிகளுக்கு விற்றதுபோக, மீதமுள்ள பொடி மீன்களை கூலி தொழிலாளிகளுக்கு அங்கேயே பகிர்ந்து கொடுப்பதும் உண்டு.
கை கொடுக்கும் இறால்: சில நாட்களாக, பனைக்குளம் கடலோர பகுதியில் சோலவ காற்று அதிகம் வீசுகிறது. இதனால், பச்சை நிற இறால் பாடு கரைவலையில் அதிகம் கிடைக்கிறது. ஒரு வலைக்கு குறைந்தது 30 முதல் 40 கிலோ வரை இறால் சிக்குகிறது.
இதற்கு நல்ல கிராக்கி இருப்பதால், கிலோ 120 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் மொத்த வியாபாரிகள், ஆர்வமுடன் இதை வாங்கி செல்கின்றனர். மீன் வியாபாரி, அப்துல்காதர்: பனைக்குளம் பகுதியில் சோலவ வீசுவதால் கரைவலையில் பச்சை நிற இறால் பாடு அதிகம் கிடைக்கிறது. கெழுத்தி, பாறை, ஊழி போன்ற மீன்களும் கணிசமாக கிடைத்து வருகிறது.
ஒரு சில நேரங்களில் பேசாளை மீன்களும் சிக்குகின்றன. தினமும் இப்பகுதியில் இருந்து 20 கிலோ இறால் வரை விற்பனைக்கு வாங்கிச் செல்கின்றேன். இந்த இறால்களுக்கு "ருசி' அதிகம் என்பதால்மக்கள் அதிகம் விரும்பு வாங்கி வருகின்றனர். இதனால், வியாபாரமும் சூடு பிடிக்கும் என்றார்.

## வடகிழக்கு பருவ மழை மூலம் 34 ஆயிரம் எக்டேரில் நெல் நடவு

சிவகங்கை : "" மாவட்டத்தில், 93 ஆயிரம் எக்டேரில் நெல் நடவு செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 34 ஆயிரம் எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளதாக,"

கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கை அருகே சோழபுரத்தில், மானாவாரி நெல் நடவு பணிகளை, ஆய்வு செய்த, அவர் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழையின் மூலம், 93 ஆயிரம் எக்டேரில், நெல் நடவு செய்வதென, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவ மழை மூலம், அக்., முதல் டிசம்பருக்குள், மாவட்ட அளவில் 413 மி.மீ., மழை பதிவாகவேண்டும்.

அக்.,9 முதல் 22 வரை வடகிழக்கு பருவ மழை மூலம், 155.25 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இந்த மழையை வைத்து, நேரடியாகவும், சாதாரணமாகவும், திருந்திய நெல் சாகுபடி மூலம் 33 ஆயிரத்து 448 எக்டேர் நிலத்தில், நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. இதில், மாவட்ட அளவில், திருந்திய நெல் சாகுபடி மூலம் மட்டுமே, 55,800 எக்டேர் நிலத்தில், நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில், ஒட்டு மொத்த கிராம திருந்திய நெல் சாகுபடியை 25 கிராமங்களில், மொத்தமாக 2,500 எக்டேரில் நடவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது, என்றார். விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை உடனிருந்தார்.

## விவசாயிகளுக்கு "கை' கொடுக்கும் "பரண்மேல்' ஆடு வளர்ப்பு மாற்று விவசாயத்தில் ஆர்வம்

பழையனூர் : மழையின்றி விவசாயம் பொய்த்தாலும், விவசாயம் சார்ந்த விவசாயிகளுக்கு "பரண்மேல்' ஆடு வளர்ப்பு தொழில் கை கொடுக்கிறது. கிராமப்புற மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர். பருவ மழை பொய்த்ததால், வானம் பார்த்த கண்மாய் வறண்டு கிடக்கிறது. கண்மாயை நம்பிய விவசாயிகள், பிழைப்புக்காக விவசாயத்தை கை விட்டு கூலித்தொழிலாளர்களாக வெளியேறி வருகின்றனர்.மோட்டார் பாசன விவசாயிகளும் தண்ணீரின்றி விவசாயம் செய்ய முடியாமல் பரிதவித்து வருகின்றனர். விவசாயத்தோடு, ஆடு, மாடு, கோழி என

கால்நடை வளர்ப்பு மூலம் கிடைக்கும் வருவாயில், ஓரளவு குடும்ப செலவுகளை ஈடுகட்டி வருகின்றனர்.

மாற்று விவசாயத்தை நாடுவோருக்கு, பரண்மேல் ஆடு வளர்ப்பு தொழில் கை கொடுக்கிறது. இங்கு வளரும் ஆடுகள், நோய் தாக்குதலின்றி ஆரோக்கியமாக வளர்கிறது. எடை அதிகரிப்பால், சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது. இதற்கு தேவையான தீவனங்கள் சொந்த வயலில் விளைவித்து அறுவடை செய்யப்படுகிறது. இதனால், தீவன செலவு குறைவதுடன், சத்தான உணவு ஆடுகளுக்கு கிடைக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் கழிவு இயற்கை உரமாக பயன்படுவதால், விவசாயத்தில் விண்ணை முட்டும் உரச்செலவுகளும் குறைகிறது.

பழையனூர் விவசாயி மாசானம் கூறியதாவது: ஆட்டு சாணம், கழிவுநீர் கலக்கும் கொட்டடியில் வளரும் ஆடுகள் நோய் தாக்கி இறக்க நேரிடும். ஆனால், பரண்மேல் ஆடு வளர்ப்பதால் நோய் தாக்குதல் குறைந்து ஆரோக்கியமாக வளர்கிறது. குறைந்த தீவன செலவில் அதிக எடையுடன் வளர்கிறது. இதற்கான தீவனத்தை சொந்த நிலத்தில் விளைவித்து தீனியாக்கலாம். ஆடுகள் மூலம் கிடைக்கும் கழிவு இயற்கை உரமாகிறது. இதில் மண்புழு உரம் தயாரித்து விற்பதால், வருமானம் கிடைக்கிறது. சொந்த நிலத்தில் கொட்டி விவசாயம் செய்தால், பயிர்கள் நல்ல செழிப்புடன் வளர்கிறது. இயற்கை விவசாயம் மூலம் காய்கறி பயிரிட்டு நல்ல லாபம் பெறலாம். விளைவிக்கும் நாமே விலை வைக்கலாம்.

மழையின்றி விவசாயம் பொய்த்தாலும், மாற்று விவசாயமான பரண்மேல் ஆடு வளர்ப்பு கை கொடுக்கிறது. இது கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தும் தொழிலாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

களக்காடு:களக்காட்டில் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

களக்காடு அரசு மேல்நிலைப்பள்ளி தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்ட மழைநீர் சேகரிப்பு பேரணி பள்ளி முன் தொடங்கியது. பேரணியை பள்ளி உதவித் தலைமையாசிரியை வேலுத்தாய் கொடியசைத்து தொடங்கி

வைத்தார். பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாக பள்ளியை வந்தடைந்தது. பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். பேரணியை சுபேதார் லோகநாதன், ஹவில்தார் முகேஷ் ஆகியோர் வழி நடத்தினர். ஏற்பாடுகளை பள்ளியின் தேசிய மாணவர் படை அதிகாரி சுந்தரராமன் செய்திருந்தார்.

## விவசாயிகள் சங்க பொதுக்குழு கூட்டம்

பாவூர்சத்திரம்:வெய்க்காலிபட்டியில் தமிழக விவசாயிகள் சங்க பொதுக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்டத்தலைவர் மணியரசு தலைமை வகித்தார். சீனிவாசன், நல்லமுத்து, காசிபாண்டி, தங்கம்மாள் முன்னிலை வகித்தனர். செயலாளர் குலையன்அண்ணாமலை வரவேற்றார். சிவலிங்கநாடார், முருகன், தங்கத்துரை, செல்லப்பா பேசினர். விவசாயிகளுக்கு அரசு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கவேண்டும். வறட்சியால் கிணற்று நீர்மட்டம் குறைவினால் கிணற்றை ஆழப்படுத்த கடன் வழங்கவேண்டும். நெல் விலையை அரசு உயர்த்தவேண்டும். செங்கல் ‹ளைக்கு தேவையான மண் எடுக்க அரசு அனுமதி வழங்கவேண்டும். அம்பை நெல் ஆராய்ச்சி மையல் நெற்பயிரை நோய் தாக்காத விதை கண்டு பிடித்ததுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சந்திரசேகரப்பாண்டியன் நன்றி கூறினார்.

## உழவுப்பணி தீவிரம்

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் பெய்த தொடர்மழையால் விவசாயிகள் தீவிரமாக உழவுப் பனி மேற்கொண்டனர். மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக போதிய மழை பெய்யாததால் விவசாயிகள் கவலையடைந்தனர். தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால் பல ஏரிகளில் தண்ணீர் வரத்து உள்ளது. இதையடுத்து திருவெண்ணெய்நல்லூர் பகுதி விவசாயிகள் சம்பா நடவுப் பணிக்காக நிலத்தில் மாடுகளை வைத்து ஏர் பூட்டி உழவுப்பணியை மேற்கொண்டனர்.

## உளுந்து சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

சின்னசேலம் : சின்னசேலம் பகுதிகளில் உளுந்து சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் தொட்டியம், பூண்டி, அம்மையகரம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் உளுந்து பயிர் செய்துள்ளனர்.
மூன்று மாத பயிரான உளுந்து கடந்த செப்டம்பர் மாதம் நடவு செய்தனர். ஏடிடி 2, ஏடிடி 3 உள்ளிட்ட ரகங்களை பயன்படுத்தியுள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகளின் பாசன பிரச்னை தீர்ந்துள்ளது.
ஒரு ஏக்கருக்கு 6 முதல் 8 மூட்டை வரை மகசூல் கிடைக்கிறது. அனைத்து செலவுகளும் போக ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். குறுகிய கால பயிர், ஆள் பற்றாக்குறை, தண்ணீர் தேவை குறைவு, அதிக லாபம் உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின் றனர்.

## வேளாண் தகவல் அறிய விவசாயிகளுக்கு...வாய்ப்பு! சமுதாய வானொலி மைய பணிகள் தீவிரம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் மையத்தில், புதியதாக சமுதாய வானொலி மையம் அமைப்பதற்கான பணிகள், தீவிரமாக நடக்கிறது. அதனால், விவசாய தகவல்களை, விவசாயிகள் அறிந்து கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில், நாடு முழுவதும், வேளாண் அறிவியல் மையங்கள் நடத்தப்படுகிறது. தமிழகத்தில், தமிழ்நாடு வேளாண் பல்கலையுடன் இணைந்து, வேளாண் அறிவியல் மையங்கள், பல்வேறு பணிகளை செய்து வருகின்றன.
விவசாயத்தில், தொழில்நுட்பத்தை மேம்படுத்த மற்றும் திருத்தி அமைக்க, விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த பிரதிநிதிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பண்ணை ஆலோசனை, விவசாய தொழில்நுட்பம், விவசாயிகளுக்கு பயிற்சி, "டிவி', ரேடியோ, இணையம் மூலமாக தகவல்கள்

வழங்கப்படுகிறது.

இந்நிலையில், நாமக்கல்-மோகனூர் சாலையில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் மையத்தில், விவசாயிகள், மகளிர் குழுக்கள், தன்னார்வலர்களுக்கு விவசாயம் சார்ந்த பயிற்சி, நவீன யுக்தி, அரசின் நலத்திட்டம் மற்றும் மானியங்கள் குறித்த தகவல்கள் வழங்கப்படுகிறது.

அதன் ஒரு பகுதியாக, ரேடியோ மூலம் விவசாய தகவல்களை வழங்க, "சமுதாய வானொலி மையம்' என்ற பெயரில், தகவல் பரிமாற்றங்கள் செய்ய திட்டமிடப்பட்டது. அதற்காக, மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு, வேளாண் அறிவியல் மையத்தை சுற்றியுள்ள, 25 கி.மீ., தொலைவில், ஒலிபரப்பு செய்வதற்கான பணிகள் முடிக்கப்பட்டது.

இந்நிலையில், வேளாண் அறிவியல் மையத்தின் ஒரு அறையில், சமுதாய வனொலி மையம் செயல்படுத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அந்த இடம் போதுமானதாக இல்லாததால், புதிய கட்டிடம் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், "ஆத்மா' திட்டத்தில், 48.88 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

வேளாண் அறிவியல் மைய வளாகத்திற்குள்ளேயே, சமுதாய வானொலி மையத்திற்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன், ஸ்டுடியோ, ரெக்கார்டிங், டிரான்ஸ்மிஷன், ரேடியோ ஜாக்கிகள், வீடியோ ஸ்டுடியோ, எடிட்டிங் செட் ஆகியன அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 25 பகுதி நேர விவசாய நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண் அறிவியல் மைய அலுவலர் ஒருவர் கூறியதாவது:

புதிய கட்டிடப்பணிகள், அடுத்தாண்டு ஜனவரிக்குள் முடிந்துவிடும். அதைத் தொடர்ந்து, சமுதாய வானொலி மையம் செயல்படுவதற்கான பணிகள் துவங்கப்படும். காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம், ஒலிபரப்பு செய்யப்படும், அதற்கு முன்னதாக, மாவட்டம் முழுவதும் விவசாயம் சார்ந்த செய்திகள் தகவல்கள் திரட்டப்பட்டு, எடிட்டிங் செய்யப்படுகிறது. நாமக்கல்

வேளாண் அறிவியல் மையம் சார்பில் செயல்படப் போகும், புதிய சமுதாய வானொலி மையத்தின், 91.2 என்ற எஃப்.எம்., மூலமாக தகவல்கள் ஒலிப்பரப்படும்.

மாவட்டத்தில், நான்கு தனியார் சமுதாய வானொலி மையங்கள் செயல்பட்டாலும், விவசாயி மற்றும் விவசாயம் சார்ந்தவர்களுக்காக, பிரத்யோகமான முறையில் வடிவமைக்கப்பட்ட, இந்த புதிய சமுதாய வானொலி மையம் செயல்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேனி அயிரை மீன்களுக்கு சென்னையில் கிராக்கி

தேனி : தேனி மாவட்டத்தில் இருந்து அயிரை மீன்கள், சென்னை பெங்களூருவில் விற்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் போடி, பெரியகுளம், சின்னமனூர், வாய்க்கால்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் உட்பட பல பகுதிகளில் அயிரை மீன்கள் அதிகளவில் கிடைக்கின்றன. வியாபாரிகள் இதனை வாங்கி சென்னை, பெங்களூரு உட்பட பெரிய நகரங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

தேனி மாவட்டத்திலேயே, அயிரை மீன்கள் கிலோ 500 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. சென்னையில் இதை விட இன்னும் அதிக விலை கிடைக்கிறது. இதனால், மீன் பிடிப்பவர்களும், விற்பனை செய்பவர்களும் நல்ல லாபம் பெறுகின்றனர். அயிரை மீன்களை வளர்ப்பது குறித்த தொழில்நுட்பத்தை,மீன்வளத்துறை அளித்தால் எந்த காலத்திலும் மீன் வளர்த்து லாபம் பெற முடியும், என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்

## முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டம் உயருமா எதிர்பார்ப்பில் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள்

கூடலூர் : வடகிழக்கு பருவ மழையால்,இரண்டாம் போக சாகுபடிக்கு பெரியாறு அணை நீர்மட்டம் உயருமா, என்ற எதிர்பார்ப்பில் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் உள்ளனர்.

பெரியாறு அணை நீரை நம்பி, கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இரு போக நெல் சாகுபடி நடக்கிறது. தற்போது, முதல்போக நெல் சாகுபடியில் அறுவடை துவங்கி உள்ள நிலையில்,அடுத்த மாதம் இரண்டாம் போக நெல் சாகுபடி துவங்கும். கடந்த ஜூலையில் துவங்கிய தென்மேற்கு பருவ மழையால், அணையின் நீர்மட்டம் 130 அடியைக் கடந்தது. இதனால், முதல் போக நெல் சாகுபடியில் எவ்வித தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்படவில்லை.
உயராத நீர்மட்டம்: கடந்த ஒரு மாதமாக பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் அவ்வப்போது கன மழை பெய்வதும், மீண்டும் சாரல் மழையாக மாறி குறைவதுமாக உள்ளது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்காததால், நீர்மட்டம் உயர்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 119.40 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 1012 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 1000 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. வரும் தண்ணீரை, அப்படியே தமிழகப்பகுதிக்கு திறந்து விட்டு விடுவதால், நீர்மட்டம் உயர வாய்ப்பில்லை. கைகொடுக்குமா வடகிழக்கு பருவமழை: கம்பம் பள்ளத்தாக்கில், அடுத்த மாதம் இரண்டாம் போக நெல் சாகுபடி துவங்க உள்ளது. வடகிழக்கு பருவ மழை துவங்கிய நிலையிலும், இதுவரை தீவிரமடையவில்லை. ஒவ்வொரு ஆண்டும், வடகிழக்கு பருவமழையால் பெரியாறு அணைக்கு நீர்வரத்து வெகுவாக உயரும். பருவ மழையால், அணையின் நீர்மட்டம் 130அடியைக் கடந்தால் மட்டுமே இரண்டாம் போக நெல் சாகுபடியையும், தண்ணீர் பற்றாக்குறையின்றி சாகுபடி செய்ய முடியும். அதனால், வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்து, அணையின் நீர்மட்டம் உயர வேண்டும், என்ற எதிர்பார்ப்பில், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் உள்ளனர்.

### ஒரே நாள் மழையில் நிரம்பிய தடுப்பணை

தேவதானப்பட்டி : சில்வார்பட்டி பெரிய ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை இரண்டு ஆண்டுகளுக்கு பின் நிரம்பியது.
பெரியகுளம் ஒன்றியம்,சில்வார்பட்டியில் விவசாயம் மற்றும் வெற்றிலைக் கொடி

பயிரிடுவது முக்கியத் தொழிலாக உள்ளது. இக்கிராமத்தில் இருந்து, 8 கி.மீ., தூரம் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்யும் மழையால், மலையடிவாரத்தில் உள்ள 10க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் நிறைந்து, அதில் இருந்து வெளியேறும் மழைநீர் சில்வார்பட்டியில் பெரிய ஓடையாக வருகிறது. அந்த ஒடையில் தோப்பு அருகே தடுப்பணை கட்டப்பட்டு நீர் தேக்கப்படுகிறது. இதனால் 30க்கும் மேற்பட்ட விவசாய கிணறுகளுக்கு நீர் ஊற்று கிடைக்கிறது. இதன் மூலம் 200 ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் தடுப்பணைக்கு நீர்வரவில்லை. தொடர்ந்து பருவமழை பெய்யாததால் தடுப்பணை நீரை ஆதாரமாக கொண்ட பல கிணறுகள் வறண்டன. இதனால் விவசாயப்பணிகள் முழுமையா தடைபட்டது. வேலை கிடைக்காமல் தொழிலாளர்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பெய்து வருகிறது. இதனால் பெரிய ஓடையில் வந்த மழைநீர் தடுப்பணையில் தேங்கியது. 2 ஆண்டுகளுக்கு பின் தடுப்பணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### பட்டுப்போன தென்னை மரங்கள் அகற்றம் தேங்காய் விலை குறைய வாய்ப்பில்லை

திண்டுக்கல்:வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அகற்றிவிட்டு புதிய கன்றுகளை நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் பொள்ளாச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல்லில்தான் தென்னை விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியால் பெரும்பாலான தென்னை மரங்கள் பட்டுப்போயின. வரத்து இல்லாததால் சில்லரை விலையில் தேங்காய் ரூ. 15 லிருந்து 20 வரை விற்கப்படுகிறது.

திண்டுக்கல்லில் இருந்து வடமாநிலங்களுக்கு தினமும் 50 லாரிகளில் தேங்காய் அனுப்பி வைக்கப்படும். தற்போது அதிகபட்சமாக 10 லாரிகள் மட்டுமே சென்று வருகின்றன. உள்ளூர் தேவைக்கே தேங்காய் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. வறட்சியினால் பட்டுப்போன தென்னைகளை தவிர்த்து மீதமுள்ளவை பிழைக்க

வேண்டுமென்றால் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்ய வேண்டும். அது இல்லாமல் போனால், ஒட்டுமொத்த தென்னைகளும் அழிந்து விடும் என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதற்காக பட்டுப்போன மரங்களை அகற்றிவிட்டு மூன்று ஆண்டுகளில் பலன் அளிக்கக்கூடிய தென்னங்கன்றுகளை நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மொத்த வியாபாரி சுவாமிநாதன் கூறுகையில்,""தற்போதைய நிலவரப்படி, அடுத்த மூன்று ஆண்டுகள் வரை தேங்காய், விலை குறைவதற்கான வாய்ப்பில்லை," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 25.10.2013

### வெங்காயம் விலை உயர்வு தற்காலிகமானதுதான்



புதுடெல்லி : வெங்காயம் விலை உயர்வு தற்காலிகமானதுதான். அடுத்த 2 அல்லது 3 வாரங்களில் விலை குறைந்துவிடும் என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார். இதுகுறித்து டெல்லியில் நேற்று சரத்பவார் அளித்த பேட்டி: நாடு முழுவதும் வெங்காயம் தட்டுப்பாடு தற்காலிகமானதுதான். கர்நாடகா மற்றும் மகாராஷ்டி ராவில் கனமழை காரணமாக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஆண்டைக்காட்டி லும் இந்த ஆண்டில் கூடுதல் நிலத்தில் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி குறைவு என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

அடுத்த 2 அல்லது 3 வாரங்களில் கர்நாடகா மற்றும் ராஜஸ்தானில் இருந்து புது வெங்காயம் வரத்தொடங்கும். இதனால் விலை விரைவில் குறைந்துவிடும். வெங்காயத்துக்கு மிகப்பெரிய சந்தையான நாசிக் கில் ஒரு கிலோ ரூ.45க்குதான் விற்கப்படுகிறது. ஆனால், வெளியில் இது ஏன் ரூ.90க்கு விற்கப்படுகிறது என்பது புரியவில்லை. வெங்காயத்தை அரசு கட்டுப்படுத்தவில்லை.

அதேபோல், வெங்காயத்தை நாங்கள் விற்கவும் இல்லை. அதன் விலை முழுவதும் சந்தைகளால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு சரத்பவார் கூறினார்.
இதேபோல், மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறுகையில், ''நிஜமாகவே வெங்காயம் தட்டுப்பாடு எதுவும் ஏற்படவில்லை. அடுத்த சில வாரங்களில் அதன் விலை குறைய அதிகளவில் வாய்ப்பு உள்ளது'' என்றார். வடமாநிலங்களில் முக்கிய நகரங்களில் வெங்காயத்தின் விலை கிலோ ரூ.100 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் ஒரு கிலோ ரூ.60 ஆக விற்பனையாகிறது.

'பணவீக்கத்தில் தாக்கம் நீடிக்காது'

பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி.ரங்கராஜனிடம், வெங்காயம் விலை உயர்வால் பணவீக்கத்தில் பாதிப்பு ஏற்படுமா என்று கேட்டபோது, ''வெங்காயம் விலை உயர்வு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடங்கலால் ஏற்பட்டதுதான். அதனால் அதனால் பணவீக்கத்தில் தற்காலிக பாதிப்பு ஏற்பட்டாலும் அது தொடர்ந்து நீடிக்காது'' என்றார்.

எக்ஸ்ட்ரா தகவல்

100 கிராம் வெங்காயத்தில், கலோரி அளவு 40 ஆகும். இந்த அளவு வெங்காயத்தில் பொட்டாசியம் 4%, கார்போஹைட்ரேட் 9%, புரோட்டீன் 2% உள்ளன.

**தேயிலை தூள் விலை சரிவு**



குன்னூர் : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான ஏலம் புதன்கிழமை நடந்தது. மொத்தம் 3 லட்சத்து 98 ஆயிரத்து 212 கிலோ

தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 2 லட்சத்து 68 ஆயிரத்து 953 கிலோ, டஸ்ட் ரகம் 1 லட்சத்து 29 ஆயிரத்து 259 கிலோ அடங்கும்.

வெளிநாட்டு வர்த்தகர்கள் கொள்முதல் செய்வதற்கு தயக்கம் காட்டினர். இதனால், அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. 60 சதவீத தேயிலை தூள் மட்டுமே விற்றது. 40 சதவீத தேயிலை தூள் தேங்கியது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரக சாதா வகை கிலோ ரூ.70 முதல் ரூ.75 வரையும், உயர் ரகம் ரூ.82 முதல் ரூ.99 வரையும், டஸ்ட் ரக சாதா வகை ரூ.75 முதல் ரூ.79 வரையும், உயர்வகை ரூ.90 முதல் ரூ.97 வரையிலும் விலை கிடைத்தது. விலை சரிவும், தேயிலை தூள் தேக்கமும் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பாகிஸ்தான், சீனா, எகிப்தில் இருந்து வெங்காயம் இறக்குமதிக்கு டெண்டர்**



புதுடெல்லி : வெங்காயம் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக பாகிஸ்தான், சீனா, ஈரான், எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு நாபெட் டெண்டர் விட்டுள்ளது. மொத்த மார்க்கெட்டில் வெங்காயம் விலை கிலோ ரூ.50 முதல் 60 வரை விற்றபோதிலும், சில்லரை விலையில் கிலோ ரூ.90க்கு விற்கிறது. எனவே விலை உயர்வைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்திய தேசிய வேளாண்மை கூட்டுறவு மார்க்கெட்டிங் சம்மேளனம் (நாபெட்) உலகளாவிய டெண்டர் கோரியுள்ளது.

பாகிஸ்தான், ஈரான், சீனா, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து வரத்தை அதிகரித்தால் விலை குறையும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஒரு டன் 200 முதல் 250 அமெரிக்க டாலர் விலையில் இறக்குமதி செய்யப்படும். எகிப்தில் இருந்து ஒரு டன் 350 டாலர் விலையில் இறக்குமதி செய்யப்படும். அதேவேளையில், ஏற்றுமதி வெங்காயத்தின் குறைந்தபட்ச விலையை ஒரு டன்னுக்கு 900 டாலர் என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

சமீபத்திய விலை உயர்வுக்கு காரணம்: டெல்லியில் வெங்காயம் விலை உயர்வுக்கு முக்கிய காரணம் மொத்த விலை வியாபாரிகளின் ஏகபோகமே கார ணம். டெல்லியில் மொத்த விலை மார்க்கெட்டில் கிலோ ரூ.48 முதல் 51 வரை கடந்த 2 தினங்களுக்கு முன்பு விற்கப்பட்டது. ஆனால், சில்லரை விலை யில் கிலோ ரூ.90க்கு விற்கப்பட்டது. இந்த விலை ஏற்றத்தை தடுக்க வேளாண்மை விளைபொருள் விற்பனை கமிட்டி (ஏபிஎம்சி) சட்டத்தை திருத்த வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சகத்தின் இணை செயலாளர் சஞ்சீவ் சோப்ரா தெரிவித்தார்.

வேளாண் விளைபொருள் விற்பனை என்பது மாநில அதிகார வரம்பிற்குள் வரும் விஷயம். எனவே வேளாண்மை விளை பொருள் விற்பனையில் சீர்திருத்தம் செய்வதற்கு தேவையான சட்டத்திருத்தம் செய்ய வரைவு மசோதாவை தயாரித்து மாநிலங்களுக்கு மத்திய அரசு கடந்த 2003ல் அனுப்பியது. இதை ஏற்று 16 மாநிலங்கள் சட்டத்தை திருத்தியுள்ளன. ஆனால், டெல்லியில் சட்டத் திருத்தம் செய்யப்படவில்லை. இதுவும் விலை உயர்வுக்கு காரணம்.

"3 வாரங்களுக்கு விலை குறையாது"

கிருஷி விஞ்ஞான் கேந்திராவின் 8வது தேசிய மாநாட்டில் பங்கேற்க பெங்களூர் வந்த மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் நிருபர்களிடம் வெங்காயம் விலை

உயர்வு குறித்து கூறுகையில், வெங்காய விலை இன்னும் 2 அல்லது 3 வாரம் வரையில் குறைய வாய்ப்பில்லை என்றார். அதன்பிறகு விலை குறையுமா என்ற நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த பவார் ‘அப்படி உறுதியாக கூற நான் ஜோதிடர் இல்லை. ஆனால், விளைபயிர்கள் குறித்து எனக்கு சிறிது தெரியும் என்ற அடிப்படையில் அவ்வாறு பதிலளித்தேன். என்னுடைய தனிப்பட்ட கணக்குப்படி தற்போதைய விலையேற்றம் அதிகபட்சம் மூன்று வாரங்கள் நீடிக்கும் என்று நினைக்கிறேன்.

வெங்காயத்தை பதுக்கி வைத்து செயற்கையாக விலையேற்றத்தை ஏற்படுத்துவோர் மீது அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அனைத்து மாநில முதல்வர்களும் முன்வர வேண்டும். எந்த ஒரு மாநிலமாவது வெங்காய இறக்குமதி குறித்த கோரிக்கையை முன்வைத்தால் அதை பரிசீலிக்க தயாராக இருக்கும்படி தேசிய விவசாய கூட்டுறவு மார்க்கெட்டிங் கூட்டமைப்பின் இயக்குநரிடம் நான் அறிவுறுத்தியுள்ளேன். இவ்வாறு சரத்பவார் கூறினார்.

எக்ஸ்ட்ரா தகவல்

இந்தியாவில் கடந்த ஆண்டு 1.63 கோடி டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. நாடு முழுவதும் ஒரு மாதத்திற்கு தேவைப்படும் வெங்காயத்தின் அளவு சுமார் 9 முதல் 10 லட்சம் டன்களாகும்.

**முட்டை விலை மேலும் உயர்வு**



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்றனர். விற்பனை நிலவரம், பிற மண்டல முட்டை விற்பனை விலை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. முட்டை விலையில் 7 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து முட்டையின் பண்ணை கொள்முதல், 349 காசில் இருந்து 356 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

ஒரே வாரத்தில் முட்டை விலை 10 காசு வரை அதிகரித்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டையின் நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருவதால், முட்டை விலை உயர்ந்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டைகோழி ஒரு கிலோ ரூ.56, கறிக்கோழி ஒரு கிலோ ரூ.67 என விலை நிர்ணயிக்கப்பட்டது. பிற மண்டலத்தில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விவரம்: (பைசாவில்) சென்னை , 345, பெங்களூரு , 335, மைசூர் , 338, ஐதராபாத் , 322, மும்பை , 358, விஜயவாடா , 324, கொல்கத்தா , 380, பர்வாலா , 337, டெல்லி , 350 காசுகள்.

**யூகலிப்டஸ் இலையில் தங்கம்**



சிட்னி : யூகலிப்டஸ் மரத்தின் இலையில் தங்கத் துகள் படிந்திருப்பதை ஆஸ்திரேலியாவை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள கல்கூர்லி என்ற பகுதி தாது வளம் நிறைந்த பகுதி. இங்கு தங்கம் அதிக அளவில் இருப்பதாக 1800ம் ஆண்டுகளிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். மண் வளத்துக்கும், அங்குள்ள தாவரங்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து இவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

கல்கூர்லி பகுதியில் உள்ள யூகலிப்டஸ் மரத்தின் இலைகளை அதிநவீன எக்ஸரே கருவி மூலம் படம் பிடித்து பார்த்தபோது, அதில் மிக நுண்ணிய அளவில், அதாவது தலைமுடியின் அகலத்தில் 5ல் 1 பங்கு அளவுக்கு தங்க துகள் படிந்திருந்ததை கண்டு பிடித்தனர். இது குறித்து புவிவேதியியல் நிபுணர் மெல் லிண்டர்ன் கூறுகையில், ''யூகலிப்டஸ் மரத்தின் வேர்கள் தரையில் 100 அடி ஆழம் வரை ஊடுருவி தங்கத் துகள் அடங்கிய நீரை உறிஞ்சுகின்றன. தங்கத் துகள் இலைகள் மற்றும் பக்க கிளைகளுக்கு கடத்தப்படுகின்றன. அவை பின்னர் காய்ந்து உதிர்ந்து விடுவதால், மரத்துக்கு பாதிப்பில்லை'' என்றார்.

இந்த ஆராய்ச்சி கட்டுரை 'நேச்சர் கம்யூனிகேஷன்' என்ற ஆய்வு இதழில் வெளியிடப்பட்டு ள்ளது. இதன் மூலம் பூமிக்கு அடியில் உள்ள தாது வளங்களை தோண்டி பார்க்காமலேயே, அங்குள்ள தாவரங்களின் மாதிரிகளை ஆய்வு செய்வதன் மூலம் கண்டுபிடித்துவிடலாம் என்பதை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியில் பொதிந்துள்ள தாமிரம் மற்றும் துத்தநாகம் போன்ற வளங்க ளையும் இதே முறையில் அங்குள்ள தாவரங்களை ஆராய்வதின் மூலம் கண்டுபிடித்துவிடலாம் என ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். யூகலிப்டஸ் தங்கம் காய்க்கும் மரங்களா என்று ஆஸி. விஞ்ஞானிகளிடம் கேட்டால், 500 மரங்களை அழித்தால்தான், சிறிய மோதிரம் செய்யும் அளவுக்கு தங்கம் கிடைக்கும் என்கின்றனர்.

எக்ஸ்ட்ரா தகவல்

பூமியிலிருந்து இதுவரை 1 லட்சத்து 74 ஆயிரம் டன் தங்கம் எடுக்கப்பட்டுள்ளதாம். உலக தங்க கவுன்சில் இந்த தகவலை தெரிவித்துள்ளது.

**விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அழைப்பு மானிய விலையில் விவசாய கருவிகள்**

சிவகாசி, : மானிய விலையில் வழங்கப்படும் விவசாய கருவிகளை பெற விவசாயிகள் விண்ணப்பம் அனுப்பலாம் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. விவசாயிகளுக்கு வேளாண் பொறிய¤யல் துறை மூலம் மானிய விலையில் விவசாய கருவிகள வழங்கப்படவுள்ளதாக கலெக்டர் ஹரி ஹரன் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை:
தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் கதிரடிக்கும் இயந்திரம், மக்காச்சோளம் பித்தெடுக்கும் கருமி, களையெடுக்கும் கருவி, இயந்திர தெளிப்பான, நெல் நடவு இயந்திரம், பவர் டில்லர், சுழல் கலப்பை, டிராக்டர், ஒருங்கிணைந்த நெல் அறுவடை மற்றும் கதிரடிக்கும் இயந்திரம், மாட்டுத்தீவனம் வெட்டும் கருவி, மரக்கிளை வெட்டும் கருவி, நெல் நாற்றாங்கால் தட்டுகள் மற்றும் ப¤ற வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இந்த விவசாய கருவிகள் தேவைப்படும் ராஜபாளையம், திருவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு ஒன்றிய பகுதி விவசாயிகள் திருவில்லிபுத்தூர் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்த¤லும், விருதுநகர், அருப்புகோட்டை, திருச்சுழ, நரிக்குடி, காரியாபட்டி ஒன்றிய பகுதி வ¤வசாயிகள் விருதுநகர் வேளாண் பொறியாளர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் விண்ணப்ப மனுக்களை வழஙகவேண்டும்.
விண்ணப்ப மனுவுடன் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை நகல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயியாக இருந்தால் அதற்குரிய சான்றின் நகல் இணைத்து வழங்கவேண்டும்.

மானியம் போக மீதி தொகையை விவசாயிகள காசோலை யாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கொடுக்கவேண் டும்.விவசாயிகள் வழங்கும் விண்ணப்ப மனுக்கள் அரசு ஆணையில் தெரிவித்துள்ள விதிமுறை படியும், மாவட்டத்திறகு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை அடிப்படையிலும் வேளாண் கருவிகள் வழங்கப்படும். விருதுநகர் மாவட்டத்திற்கு பொது பிரிவினருக்கு ரூ.84.25 லட்சம், ஆதிதிராவிடர் பிரிவிற்கு ரூ.48.70 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த அரிய வாய்பபை பயன்படுத்தி மானிய விலையில் விவசாய கருவிகள் மற்றும் இயந்திரங்களை பெறலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.10.2013**

**மயிலம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரம்**



மயிலம்,

மயிலம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது.

சின்ன வெங்காயம் அறுவடை

மயிலம் பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களது நிலத்தில் கடந்த 3 மாதங் களுக்கு முன்பு சின்ன வெங் காயம் (சாம்பார் வெங்காயம்) சாகுபடி செய்திருந்தனர். தற்போது வெங்காய பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில் மயிலம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்தால் வெங்காயம் அழுகி விடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். மேலும் சில விவசாயிகள் தாங்கள் பயிர் செய்துள்ள வெங்காயத்தை அறுவடை செய்ய தொடங்கி யுள்ளனர். அப்படி அறுவடை செய்துள்ள வெங்காயத்தை தங்களது வீடுகளில்காய வைத்து பின்னர் வியாபாரி களுக்கு கொடுக்கின்றனர்.

மயிலம் பகுதியில் வெங் காயம் அறுவடை தீவிரமாக நடந்து வருவதால், வியா பாரிகள் குறைந்த விலைக்கு சின்ன வெங்காயத்தை கொள்முதல் செய்வதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விலை குறைவு

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கடந்த வாரத்தில் 80 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ.4 ஆயிரத்திற்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். தற்போது தொடர்ந்து மழை பெய்வ தாலும், மயிலம் பகுதி முழுவதும் வெங்காயம் அறுவடை நடந்து வருவ தாலும் சின்னவெங்காயத்தின் விலையை வியாபாரிகள் குறைத்துள்ளனர். தற்போது 80 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ.3 ஆயிரம் என விலை நிர்ணயம் செய் கின்றனர். நாங்களும் வேறு வழியின்றி, அந்த விலைக்கு சின்னவெங் காயத்தை கொடுக்கிறோம். திண்டிவனம், சென்னை காய்கறி மார்க் கெட்டில் ஒரு கிலோ வெங் காயம் ரூ.60 முதல் ரூ.90 வரை விற்பனை செய்யப் படுகிறது. ஆனால் எங்களிடம் இருந்த வியாபாரிகள் ரூ.37-க்கு சின்னவெங் காயத்தை வாங்கி செல்கின்ற னர்.

நடவடிக்கை

வரும் காலங்களில் வெங்காயத்தை அரசே நேரடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## நாகையில் விலையில்லா கறவைப்பசுக்கள்–வெள்ளாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை நாளை நடக்கிறது



நாகப்பட்டினம்,

நாகையில் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கு நாளை(சனிக்கிழமை) இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது என்று நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**விலையில்லா கறவைப்பசுக்கள்**

முதல்– அமைச்சரால் கடந்த 2011–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ந் தேதி தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களில் தமிழகத்தில் வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வீதம் 31 மாவட்டங்களுக்கும், ஒரு பயனாளிகளுக்கு 1 கறவைப்பசுக்கள் வீதம் 31 மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அதை தொடர்ந்து நாகை மாவட்டத்தில் விலையில்லா கறவைப்பசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2011–12–ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கு, 650 கறவைப்பசுக்களும், 2012–13–ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கு, 650 கறவைப்பசுக்களும், 2013–14–ம் ஆண்டில் அக்டோபர் 20–ந் தேதி முடிய 400 பயனாளிகளுக்கு, 400 கறவைப்பசுக்களும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்புத்தாண்டில் பரிசு**

விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2011–12–ம் ஆண்டில் 3161 பயனாளிகளுக்கு 12,644 வெள்ளாடுகளும், 2012–13–ம் ஆண்டில் 5396 பயனாளிகளுக்கு 21,584 வெள்ளாடுகளும், 2013–14–ம் ஆண்டில் அக்டோபர் 20–ந் தேதி முடிய 4221 பயனாளிகளுக்கு 16,884 வெள்ளாடுகளும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. முதல்–அமைச்சர் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க

வேண்டுமென வலியுறுத்தி உள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு 2011–12 மற்றும் 2012–13–ம் ஆண்டுகளில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் பரிசுகள் வழங்கப்பட்டது.

<u>**குடற்புழு நீக்க முகாம்**</u>

விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப்பசுக்களின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் எடையினை அதிகரிக்கவும், நாகையில் நாளை(சனிக்கிழமை) கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவு எதிரொலி முல்லைப்பெரியாறு வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்தது**



கூடலூர்

நீர்ப்பிடிப்பு பகுதி களில் மழை குறைந்து உள்ளதால், முல்லைப் பெரியாறு மற்றும் வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

## முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்தது. போடி போன்ற ஒரு சில பகுதிகள் தவிர்த்து மாவட்டத்தின் பெரும் பாலான பகுதிகளில் இந்த மழை நீடித்தது. இந்நிலை யில் கடந்த 2 நாட்களாக தேனி மாவட்டத்தில் மழை யின் தாக்கம் குறைய தொடங்கி உள்ளது. மாறாக பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் மீண்டும் அதிகரித்து உள்ளது. இதனால் வடகிழக்கு பருவமழை தொடங்கியதாக நம்பி இருந்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந் துள்ளனர். தேனி மாவட்டத் திற்கு பிரதான பாசன மற்றும் குடிநீர் ஆதாரமாக திகழும் முல்லைப்பெரியாறு அணைப் பகுதியிலும் மழை குறைய தொடங்கி உள்ளது.

குறிப்பாக கடந்த சில தினங்களுக்கு முன்பு வரை அணைப்பகுதியில் சுமார் 20 மில்லிமீட்டர் என்ற அளவில் சீராக மழை பெய்து வந்தது. ஆனால் நேற்று முன்தினம் அணைப்பகுதியில் 5.6 மில்லிமீட்டராக மழையளவு குறைவாக பதிவாகி உள்ளது. அணையையொட்டி அமைந் துள்ள தேக்கடியிலும் 1.2 மில்லி மீட்டராக மழை குறைந்து உள்ளது.

## நீர்வரத்து குறைந்தது

கடந்த சில தினங்களுக்கு தொடர் மழை எதிரொலியாக அணைக்கு வினாடிக்கு 1,200 கன அடி அளவில் காணப் பட்ட நீர்வரத்து நேற்று வினாடிக்கு 597 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1000 கன அடி நீர் திறந்து விடப் படுகிறது. இருப்பினும் கடந்த சில தினங்களாக நீடித்த மழை காரணமாக அணை நீர்மட்டம் 119.20 அடியாக சற்று உயர்ந்து காணப்படுகிறது. ஆனால் தற்போது மழை குறைய தொடங்கி உள்ளதால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து குறையும் சூழல் உள்ளது. அணையில் தற்போது 2,484 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

## வைகை அணை

71 அடி உயர வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 50.39 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 880 கன அடியாக நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது.

அணையில் இருந்து வினாடிக்கு 1,260 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 2,045 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. வைகை அணையில் நேற்று 2 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

**<u>மஞ்சளாறு அணை</u>**

57 அடி உயர மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 44.20 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 42 கன அடிநீர் வரத்து காணப் படுகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 8 கன அடிநீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 245.50 மில்லியன் கன அடியாக நீர் இருப்பு உள்ளது. 126 அடி உயர சோத்துப் பாறை அணையின் நீர்மட்டம் 105.94 அடியாக காணப் பட்டது. அணைக்கு வினாடிக்கு 3 கன அடிநீர் வரத்து காணப்படுகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 3 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப் படுகிறது. அணையில் 68.63 மில்லியன் கனஅடியாக நீர் இருப்பு உள்ளது.கடந்த சில தினங்களுக்கு தொடர் மழை எதிரொலியாக அணைக்கு வினாடிக்கு 1,200 கன அடி அளவில் காணப் பட்ட நீர்வரத்து நேற்று வினாடிக்கு 597 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1000 கன அடி நீர் திறந்து விடப் படுகிறது. இருப்பினும் கடந்த சில தினங்களாக நீடித்த மழை காரணமாக அணை நீர்மட்டம் 119.20 அடியாக சற்று உயர்ந்து காணப்படுகிறது. ஆனால் தற்போது மழை குறைய தொடங்கி உள்ளதால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து குறையும் சூழல் உள்ளது. அணையில் தற்போது 2,484 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.